




**பேராசிரியர் முனைவர் பொன் கதிரேசன் நாமக்கல் மாவட்டம்**
**20 ஆண்டுகால தமிழ் பணிகளின் (2000-2020) சான்றாதார மதிப்பீடு**
**சுய விவர அறிக்கை**

**பரிந்துரைக்கப்படும் அறிஞர் பெயர் முனைவர் பொன்.கதிரேசன்**

**முழு முகவரி**

முனைவர் பொன் கதிரேசன்.

**தந்தை பெயர்** பொன்னுசாமி அருக்காணி.

115, அக்கலாம்பட்டி,
நாமகிரிப்பேட்டை அஞ்சல் 637 406
ராசிபுரம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்,
**பிறந்த தேதி :** 21. 6. 1982

**வயது** 38

**தொலைபேசி எண்** 9360507675

**மின்னஞ்சல் முகவரி** umponkathir@gmail.com

**கல்வித்தகுதிகள்** M.A , M.PHIL., T.P.T., UGC (NET)., PH.D., DIP.YOGA

**பிறப்பும் சிறப்பும்**

நாமக்கல் மாவட்டத்தில் பிறப்பெடுத்து சிறப்பு எடுத்தவர் முனைவர் பொன் கதிரேசன் அவர்கள் நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் வட்டம் நாமகிரிப்பேட்டை அஞ்சல் 637 406 அக்கலாம்பட்ட என்னும் சிற்றூரில் பொன்னுசாமி அருக்காணிஅம்மாள் எனும் இல்லற இணையருக்கு பிறந்தவர். இல்லறக் கடமைகளைச் செய்யும் இனியவர் இல்லத்தரசி ஆங்கிலம் பட்டதாரி ஆசிரியை உமாமகேஸ்வரி.

அன்பு மகன்கள் இரண்டு பேர்

1. க.பொன்வெற்றித் தமிழ்
2. க.பொன்கவின்தமிழ்

உடன் பிறந்தவர்கள் அண்ணன் அக்கா தங்கை ஆகியோர் ஆவர். படிப்படியாக முன்னேறிய அன்பிற்கினியவர் மிகவும் ஏழ்மையான குடும்பத்திலிருந்து பிறந்து இன்று உயர்ந்த நிலைமைக்கு முன்னேறியவர்.

**பணி விவரங்கள் / நூல்கள் / ஆய்வு பணிகள் / சிறப்பு பட்டங்கள் / கருத்தரங்குகள் / தமிழ் செம்மொழிக்கு ஆற்றிய சாதனைகள் / சான்று விவரங்கள்.**

**பன்முக பேச்சாளர்**

1998ஆம் ஆண்டு முதல் சிறந்த பேச்சாளராகவும் கவிஞராகவும் திகழ்கின்றார்.

**தமிழ் சங்கத்தின் தமிழ் பண்டிதராக வளர்ந்தவர்**

தஞ்சை தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தை கலை அறிவியல் கல்லூரியில் தமிழ் இளநிலை இலக்கியம் பட்டம் (2003) பெற்றவர்.

தஞ்சை ஒரத்தநாடு அரசு கல்வியியல் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதர் பயிற்சி (2004) பெற்றவர்.

**பல்கலையில் பல பட்டங்கள் பெற்றவர்**

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் கலையியல் நிறைஞர் பட்டம் (2006)ஆய்வியல் நிறைஞர் பட்டம் (2008)முனைவர் பட்டம் (2015) பெற்றவர்.

**மூன்றாண்டுகள் தமிழாசிரியர் பணி** ராசிபுரம் சுவாமி மெட்ரிகுலேஷன் பள்ளியில் ஓராண்டு (2004) உயர்நிலை தமிழ் ஆசிரியர்.

நாமக்கல் அணியாபுரம் லிட்டில் ஏஞ்சல்ஸ் மெட்ரிக் குலேஷன் பள்ளியில் ஈராண்டுகள் (2005- 2007)மேல்நிலை தமிழாசிரியர்.

**கல்லூரி பேராசிரியராக 14 ஆண்டுகள் பணி**

சேலம் ஏ வி எஸ் கலை அறிவியல் கல்லூரியில் ஈராண்டுகள் (2007 முதல் 2009 )வரை இளநிலை தமிழ் உதவிப் பேராசிரியராக பணியாற்றியவர்.

பெரம்பலூர் தந்தை ஹேன்ஸ் ரோவர் கலை அறிவியல் கல்லூரியில் தமிழ்த்துறையில் முதுகலை மற்றும் ஆய்வியல் நிறைஞர் உதவிப் பேராசிரியராக (2009 முதல் 2014 வரை) 6 ஆண்டுகள் பணியாற்றியவர்.

தற்பொழுது புதுக்கோட்டை மாவட்டம் அரசு உதவி பெறும் கல்லூரி மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் (2014 முதல்)தமிழ்

உதவிப் பேராசிரியராகவும் முனைவர் பட்ட ஆய்வு நெறியாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

தமிழ் துறையில் 2000 ஆண்டு முதல் இன்று வரை இருப்பது ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றவர்.

**பேராசிரியர் தகுதி தேர்வில் 2 முறை தேர்ச்சி**

யுஜிசி நெட் தேர்வில் இரண்டு (2006-2007) முறை தேர்ச்சி பெற்றுள்ளார்.

எம்.ஏ . எம்பில் .பிஎச்டி மாணவர்களுக்கு சிறந்த நெறியாளர் 35கலையியல் நிறைஞர் திட்டக்கட்டுரை மாணவர்களுக்கும் / 25ஆய்வியல் நிறைஞர் மாணவர்களுக்கும் / முனைவர் பட்டம் நான்கு மாணவர்களுக்கும் ஆய்வு நெறியாளராக பணியாற்றியுள்ளார்.

**உலகை மாற்றும் திறனாளி**

1984 இல் போலியோவால் வலது கால் பாதிக்கப்பட்டுமாற்றுத்திறனாளியாக திகழும் இவர் தற்போது தமிழ்நாடு உதவிக்கரம் மாற்றுத் திறனாளர் நல்வாழ்வு சங்கத்தின் புதுக்கோட்டை மாவட்டத் தலைவராக (2014 முதல்) செயலாற்றி வருகின்றார். கடந்த 20 ஆண்டுகளாக (2000-2019) ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாற்றுத் திறனாளிகளுக்கு சட்ட திட்ட விழிப்புணர்வு வழங்கி உள்ளார்.

**பன்னாட்டு தேசியக் கருத்தரங்குகள் ஒருங்கிணைப்பாளர்**

ஒருங்கிணைப்பாளராக இருந்து பன்னாட்டளவில் மூன்று கருத்தரங்குகளும், தேசிய அளவில் மூன்று கருத்தரங்குகளும் நடத்தியுள்ளார்.

**சிறந்த ஆய்வுக் கட்டுரையாளர்**

இதுவரை பன்னாட்டு தேசிய அளவில் 62 ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார்.30 நூல்களை படைத்துள்ளார்.

**வளர்ந்த கவிஞர்களின் வாழ்த்துக்கள் பெற்ற வளரும் கவிஞர்**

தமிழ் பெரும் கவிஞர்களின் (சிற்பி வைரமுத்து சுரதா தியாரூ முதலிய) வாழ்த்துக்களுடன் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மரபு மற்றும் புதுகவிதைகளை இயற்றியுள்ளார்.

**இந்திய அளவிலான இளம் சாதனை சொற்பொழிவாளர்**

தமிழ்நாடு ஆந்திரா கேரளா கர்நாடகா உள்ளிட்ட 8 க்கும் மேற்பட்ட பல்கலைக் கழகங்களிலும், அரசு மற்றும் தனியார் பள்ளி ,கல்லூரி,பொது நிறுவனங்களில் இதுவரை 600க்கும் மேற்பட்ட சமூகத்தமிழ்ச் சிறப்பு சொற்பொழிவுகள் ஆற்றி உள்ளார்.

**பல்வேறு அமைப்புகளுக்கு பொறுப்பாளர்**

மதுரை உலகத் தமிழ்ச் சங்கம், திருச்சிராப்பள்ளி தமிழ்ச் சங்கம் முதல் கேரள தமிழ் பண்பாட்டு மையம் வரை 20க்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புகளில் பொறுப்புமிகு உறுப்பினராக இருந்து செயலாற்றி வருகின்றார்.

**சாதனை மிக விருதுகளின் நாயகர்**

கடந்த 20 ஆண்டுகளில் இவர்தம் சமூக தமிழ் பணிகளையும் தொண்டினையும் பாராட்டி16 க்கும் மேற்பட்ட விருதுகளை பல்வேறு தமிழ் அமைப்புகள் இவருக்கு வழங்கி பெருமைப்பட்டுக் கொண்டுள்ளன.

1. மாணவப் பருவத்தில் தலைமைப் பண்புகளைப் பெற்று இருந்தமையை பாராட்டி கரந்தைத் தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலை அறிவியல் கல்லூரி இளங்கோவடிகள் தமிழ்க் கழகம் சிறந்த மாணவர் தலைவர் (2003) என்னும் விருதினை இவருக்கு வழங்கி சிறப்பித்தது.

2.கவி புலமை பெற்று திகழும் அதற்காக தஞ்சை ஒரத்தநாடு அரசு கல்வியியல் கல்லூரி நாமக்கல் கவிமுரசு விருது 2004 வழங்கி பெருமைப்படுத்தியது.

3. நாடகம் நடனம் கூட்டுப்பயிற்சி வழங்கியமைக்காக சம்பாபாலிபுதூர் சுவாமி மெட்ரிகுலேஷன் பள்ளி கலை வளர்க்கும் கதிரோன் விருது 2004 வழங்கிப் பாராட்டியது.

4.இசைத்தமிழ் உடன் கூடிய பன்முக நோக்கில் தமிழ் பாடங்களை கற்றல் கற்பித்தல் பயிற்சியை சிறப்பாக வழங்கியமைக்காக நாமக்கல் அணியாபுரம் லிட்டில் ஏஞ்சல்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி பன்முகத் தமிழ்ஆசிரியர் விருது 2007 வழங்கி பெருமை கொண்டது.

5.தமிழ்மன்ற செயல்பாடுகளை சிறப்பாக நடத்தமைக்காக சேலம் ஏவிஎஸ் கலை அறிவியல் கல்லூரி தமிழ்மன்ற செயல் செழுமையர் விருது 2008 இவருக்கு வழங்கி சிறப்பித்தது. கல்லூரி வளர்ச்சிக்காகவும் பல்வேறு நிகழ்வுகளில் நிகழ்ச்சி நெறியாளுகை கண்டு சிறப்பித்தமைக்காக பன்னாட்டு அளவில் பல்வேறு கட்டுரைகளை எழுதியமைக்காக பெரம்பலூர் தந்தை ஹேன்ஸ் ரோவர் கலை அறிவியல் கல்லூரி இவருக்கு சாதனை பேராசிரியர் விருது 2013 வழங்கி பெருமைப்படுத்தியது.

6.தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களுக்கு சென்று அரசு அலுவலக ஊழியர்களுக்கு ஆட்சி மொழி பயிற்சி கருத்தரங்கத்தில் மொழிப்பயிற்சி சிறப்பாக வழங்கியமைக்காக அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்

தமிழ்வளர்ச்சித்துறை இவருக்கு சிறந்த ஆட்சித்தமிழ் பயிற்சியாளர் விருது 2013 வழங்கிப் பாராட்டியது.

7. கோவை தமிழ் சங்கத்தில் 72 மணி நேரம் தொடர் கவியரங்கில் சிறப்புக்கவிதை வழங்கியமைக்காக உலகமகா சாதனையாளர் விருது 2011 இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

8.காவலர்களுக்கு எழுச்சி ஊட்டும் வகையில் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கியதால் தன் திறமையை பாராட்டும் விதமாக பெரம்பலூர் தற்காலிக காவலர் பயிற்சிப்பள்ளி தமிழ்நாடு காவல்துறை இவருக்கு சிறந்த நிகழ்ச்சி நெறியாளர் விருது 2011 வழங்கி சிறப்பித்தது.

9. சமூகத்தில் பிறர்நலம் போற்றும் சேவையைப் பாராட்டி திருச்சி உலக யோகா மையம் இவருக்கு மனிதநேய மாமணி விருது 2012 வழங்கி பெருமைப்படுத்தியது.

10. எழுத்துலக சாதனையில் மாற்றுத்திறனாளிகளை ஒருங்கிணைத்து பன்னாட்டு அளவிலான கருத்தரங்கம் நடத்த மிக திருச்சி பாரதிதாசன் மாற்றுத்திறனாளிகள் மையமும் தமிழ்நாடு உதவிக்கரம் மாற்றத்தினால் நல்வாழ்வு சங்கமும் இணைந்து இவருக்கு பன்முக ஆளுமை மாற்றுத்திறனாளி ஆசிரியர் 2018 என்னும் விருதினை இவருக்கு வழங்கியது.

11. 15 ஆண்டுகளுக்கும் மேலாக 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு சிறந்த மொழி கற்பித்தல் தன்னம்பிக்கை பயிற்சிகளை மேற்கொண்ட மேற்காக கரூர் முத்தனூர் ஸ்ரீ ராமகிருஷ்ணா 11 உயர்நிலைப் பள்ளி கல்வி குழுமம் இவருக்கு தன்னம்பிக்கை சிகரம் விருது2018 வழங்கி பெருமைப்படுத்தியது.

12. பல்லாண்டுகளாக செம்மொழித் தமிழை பல்வேறு களங்களில் வளர்ச்சிக்காக தஞ்சாவூர் கரந்தை தமிழ்ச்சங்கம் இவருக்கு தமிழ்ச் செம்மொழி ஆளுமை விருது 2016 வழங்கி சிறப்பித்தது.

13. கல்விப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு புதுமையான சிந்தனைகளை கவிதைகளாக வழங்கி வரும் இவரின் கவித்துவத்தை பாராட்டி பட்டுக்கோட்டை சிட்டி அரிமா சங்கம் பன்னாட்டு லைன் சங்கங்கள் சேர்ந்து இவருக்கு கல்வி பாரதி 2018 வழங்கி சிறப்பித்தது.

14. பத்தாண்டுகளுக்கும் மேலாக நூலகத்தில் தொடர்ந்து வந்து குறிப்புகள் எடுத்து வாசித்த மையை பாராட்டி சென்னை கன்னிமாரா நூலகம் இவருக்கு சிறந்த வாசகர் பேராசிரியர் விருது2019 வழங்கி பெருமைப்படுத்தி உள்ளது.

15. இந்தியா மற்றும் தமிழக அளவில் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வியலை ஆராய்ச்சி செய்து புதுமையான சிந்தனைகளை மாற்றுத்திறனாளிகள்

மத்தியில் விதைத்து வரும் முயற்சியை பாராட்டி தமிழ்நாடு உதவிக்கரம் மாற்றுத்திறனாளர் நல்வாழ்வு சங்கம் இவருக்கு சிறந்த மாற்றுத்திறன் சாதனையாளர் 2019 விருது வழங்கி பாராட்டியது.

16. பத்தாண்டுகளாக இந்திய அளவிலான இவர் தம் கல்விப் பணியை பாராட்டி டெல்லியை சேர்ந்த சமூகக் கல்வி வளர்ச்சி அமைப்பாகும் இவருக்கு சிறந்த கல்வியாளர் விருது2019 வழங்கி சிறப்பித்துள்ளது.

இவ்வாறு இந்திய அளவிலான பல்வேறு தமிழ் அமைப்புகளும் சமூக கல்வி சிந்தனை வளர்ச்சி நிறுவனங்களும் இவர்தம் சமூக மற்றும் கல்வி சார்ந்த பணிகளை பாராட்டி பல்வேறு விருதுகளை வழங்கி சிறப்பித்துள்ளது.

**ஓய்வான பொழுதெல்லாம் ஆய்வான பொழுதாக மாற்றும் ஆய்வுத் தமிழறிஞர்**

2005 ஆம் ஆண்டிலிருந்து உலக அளவிலான பல்வேறு தமிழாய்வு சிந்தனைகளை கொண்டு உலகத் தரமான ஆய்வுக்கட்டுரைகளை வழங்கி வருகின்றார்.

2019 வரை இதுவரைக்கும் பன்னாட்டு தேசிய அளவிலான கருத்தரங்குகளில் மற்றும் பன்னாட்டு ஆய்வு இதழ்களில் 62 க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை எழுதி ஆய்வுக்கோவை நூல்களாக வெளிவந்துள்ளது.

2007 முதல் 2020 வரை முப்பதுக்கும் மேற்பட்ட முதுகலை மாணவர்களாகிய திட்டக்கட்டுரை ஆய்வாளர்களுக்கு நெறியாளராக செயல்பட்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டுவரை 25க்கும் மேற்பட்ட ஆய்வியல் நிறைஞர் மாணவர்களுக்கு நெறியாளராக பணியாற்றியுள்ளார்.

2016 முதல் முனைவர் பட்ட நான்கு மாணவர்களுக்கு ஆய்வு நெறியாளராக செயல்பட்டு வருகின்றார். மாற்றுத் திறனாளிகளுக்கு மட்டுமே முனைவர் பட்டம் ஆய்வு மேற்கொள்வதை வாழ்வின் முக்கிய குறிக்கோளாக கொண்டு ஆய்வில் ஆய்வு பணிகளை மேற்கொண்டு வருகின்றார்.

**சமூகப் பயன் நல்கும் பன்முக படைப்பாளி**

பன்முக படைப்பாளர் முனைவர் பொன் கதிரேசனார்அவர்கள் கடந்த 20 ஆண்டுகளில் 30 க்கும் மேற்பட்ட படைப்புகளை படைத்துள்ளார்.

**வாழ்க்கையே தமிழுக்கு ஒப்படைத்தவர்**

இவ்வாறு தம்முடைய வாழ்க்கையை தமிழுக்காகவும் தமிழர்களுக்காகவும் ஒப்படைத்து மாபெரும் சாதனை படைத்தவராக வலம் வருகிறார்.

**பிறவியின் நோக்கமே பிறர்நலம் போற்றுதல்** என்னும் இலக்கை கொண்டு வாழ்ந்து வருபவர் தமிழ் பண்டிதர் பொன் கதிரேசனார்.

நாமக்கல் மாவட்டத்தை சார்ந்த நாமக்கல் நாவுக்கரசு நாமக்கல் கவிமுரசு பேராசிரியர் முனைவர் பொன். கதிரேசன் அவர்கள் சரித்திரம் போற்றும் சாதனை மிகுசமூக தமிழ் பணியாற்றி வருகின்றார். வாழ்க அவர் தமிழ் பணி, வளர்க அவர் சமூகத் தொண்டு.

**தமிழ்ப்பேராசிரியர் முனைவர் பொன்.கதிரேசன் நாமக்கல் மாவட்டம்**

**9360507675**

